செ.வெ.எண் -11 நாள்:09.03.2018

# அரியலூர் மாவட்டத்தில் குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு வீதி நாடக நிகழ்ச்சிகள் 6 ஒன்றியங்களில் 24 இடங்களில் நடைபெறுவதை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சே.தனசேகரன் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் குழந்தை திருமணம் தடுத்தல், குழந்தை தொழிலாளர் முறையை ஒழித்தல், குழந்தை கடத்தலை தடுத்தல், குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு வழங்குதல், குழந்தைகள் தத்தெடுத்தல் மற்றும் முறையற்ற தத்தெடுத்தல் தொடர்பாக வீதி நாடகம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நடைபெறுவதை முன்னிட்டு, இன்று (09.03.2018) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.சே.தனசேகரன்** அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தின் 6 ஒன்றியங்களில் (அரியலூர், செந்துறை, திருமானூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் மற்றும் தா.பழூர்) தலா 4 நிகழ்ச்சிகள் வீதம் 8 நாள்களுக்கு தினந்தோறும் 3 நிகழ்ச்சிகள் என 24 வீதி நாடக நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

இவ்வீதி நாடகத்தினை பொது மக்கள் கண்டுகளித்து குழந்தைகளுக்கெதிரான குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகள் இருந்தால் தொடர்புடைய அலுவலகங்களை அணுகுமாறும், இவ்வீதி நாடகத்திற்கு பொது மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஆதரவற்ற குழந்தைகள், தனியாக காணாமல் போன, பயத்துடன் அழுது கொண்டிருக்கும் குழந்தைகள், சந்தேகத்திற்குரிய நபர்களுடன் குழந்தைகள், பிச்சை எடுக்கும் குழந்தைகள், குழந்தை தொழிலாளர்கள், பொருட்கள் விற்பனை செய்யும் குழந்தைகள், குழந்தையை வைத்து பிச்சையெடுக்கும் நபர்கள், குப்பைகளை சேகரிக்கும் குழந்தைகள், போதை பொருட்கள் பயன்படுத்தும் அனைத்து குழந்தைகளுக்கும் உங்கள் உதவி தேவைப்படலாம். இக்குழந்தைகள் வீட்டிலிருந்து ஓடி வந்திருக்கலாம் அல்லது கடத்தப்பட்டிருக்கலாம், அவ்வாறான குழந்தைகள் கண்டறியப்பட்டால் கீழ்காணும் ஏதேனும் ஒரு 24 மணி நேர குழந்தைகளுக்கான இலவச தொலைபேசி எண் 1098 சைல்டுலைன், 100 காவல்துறை, 182 இரயில்வே எண் அல்லது அருகாமையில் உள்ள காவல் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கலாம். மேலும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த தகவல்களுக்கு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, 2வது தளம், அரசு பல்துறை வளாகம், அரியலூர் என்ற முகவரியை அணுகுமாறு மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.சே.தனசேகரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் கா.முகமது யூனுஸ்கான், ஒருங்கிணைப்பாளர் செல்வராஜ், பெரம்பலூர் ஓசை கலைக்குழுவினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**